**செய்தி வெளியீடு எண்:120** **நாள்:14.02.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 13.2.2021 அன்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், திருநல்லூர் – விராலிமலை சாலையில் 9 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலத்தினை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், செங்கல்பட்டு, திருவள்ளூர் கடலூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி, கோயம்புத்தூர், தருமபுரி, மதுரை மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் 100 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 பாலங்கள், ஒரு புறவழிச்சாலை மற்றும் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய ஒரு நடை மேம்பாலத்தையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உட்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்தும், பெருகிவரும் போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதிசெய்யவும், மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், திருநல்லூர் – விராலிமலை சாலை கி.மீ 7/2–ல் திருநல்லூரில் 9 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம், கீழ்கட்டளை அருகே மவுண்ட் – மேடவாக்கம் சாலை மற்றும் பல்லாவரம் – துரைப்பாக்கம் சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணியின் ஒரு பகுதியாக 29 கோடியே 50 லட்சம் ரூபாய் மதீப்பீட்டில் துரைப்பாக்கம் – பல்லாவரம் போக்குவரத்து திசையில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம்;

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், தாம்பரம் ஜி.எஸ்.டி சாலை கி.மீ 25/6–ல் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம் மற்றும் தாம்பரம் இரயில்வே நிலைய நடைமேம்பாலத்தை இணைத்து ஆகாய நடைபாதை அமைக்கும் பணியின் ஒரு

பகுதியாக 9 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஜி.எஸ்.டி சாலை பகுதியில் கட்டப்பட்டுள்ள நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம்;

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், பிஞ்சிவாக்கம் – ஹரிஜன் காலனி சாலை, பிஞ்சிவாக்கத்தில் கூவம் ஆற்றின் குறுக்கே 10 கோடியே 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிராப்பள்ளி –துறையூர் சாலையில் (மாநில சாலை 62) கி.மீ 2/2–ல் துவங்கி அதே சாலையில் கி.மீ 4/8–ல் சேரும் மண்ணச்சநல்லூர் நகரத்திற்கு 25 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2.64 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள புறவழிச் சாலை;

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், சாத்திப்பட்டு – எஸ்.புதுப்பாளையம் சாலை, சாத்திப்பட்டில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் கீழ்மாம்பட்டு சாலை (வழி) கொட்டிக்கோணங்குப்பம் சாலை, கீழ்மாம்பட்டில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 2 பாலங்கள்;

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், அரவேணு–அளக்கரை சாலை சேலடாவில் 1 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், கோவை – தொண்டாமுத்தூர் – நரசீபுரம் சாலை, சுண்டப்பாளையத்தில் 1 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், நவலை – பெரமாண்டபட்டி சாலை, பெரமாண்டபட்டியில் 11 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், ஆலம்பட்டி – சேடப்பட்டி சாலை சௌடார்பட்டியில் 4 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், மயிலாடும்பாறை – தங்கம்மாள்புரம் (வழி) மூலக்கடை, வாய்க்கால்பாறை சாலை, கருப்பையாபுரத்தில் 3 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம் 110 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 பாலங்கள், ஒரு நடை மேம்பாலம், மற்றும் ஒரு புறவழிச்சாலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஆ.கார்த்திக், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) திருமதி என். சாந்தி, தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) திரு.ஆர். சந்திரசேகர், தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) திரு.எம்.கே. செல்வன், தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) திருமதி ச.சுமதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9